# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 22 – International Editor : Michael W.Smith – இதழ் - 22


## தேவத்துவத்தின் வெளிப்பாடு

(இந்த விளக்கங்கள் மத் 3 : 13-17, யோவான் 1 : 31-34 லிருந்து கொடுக்கப்பட்டுள்ளது).

இயேசு ஞானஸ்நானம் பெறும்படியாக யோர்தானிலே இறங்குவதை யூதர்களாகிய அவருடைய சொந்த ஜனங்கள் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.அவர் யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே வந்தார்.இயேசு தம்மை அனுப்பின பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படியாக அவருடைய 30வது வயதிலே ஊழியம் செய்யத் தொடங்கினார். அவர் ஜலத்திலே இறங்கினவுடனே யோவான் அவருக்குத் தடைசெய்து : நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். ஏனெனில் பிதாவாகிய தேவன் மேசியாவாகிய இயேசுகிறிஸ்துவை யோவான்ஸ்நானகனின் மூலம் இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது.தேவஆவி புறாவைப் போல் இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி : இவர் என்னுடைய நேசகுமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

அன்று யோர்தான் நதியிலே தேவனுடைய பரிபூரணமான நாமம் வெளிப்படுத்தப்பட்டது. திரித்துவ தேவனின் மூன்றுவிதமான நாமங்களின் வெளிப்பாட்டை நாம் அங்கே காணலாம்.ஒன்று இயேசுகிறிஸ்து என்கிற நாமம், பிதாவின் குமாரனாய் ஞானஸ்நானம் பெற்று, கரையேறினதும் பரிசுத்ஆவி என்கிற நாமம் புறாவைப்போல் அவர்மேல் இறங்கியது.பிதாவாகிய தேவன் பரலோகத்திலிருந்து பேசினார்.திரித்துவ தேவனாகிய பிதா, குமாரன், பரிசுத்தஆவியானவர் மூவராயிருந்தும் கிரியையில் ஒன்றே. திரித்துவம் என்கிற கோட்பாடானது தேவனுடைய கிரியையை விவரிக்கிறது.பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்கிற திரித்துவ நாமத்தைக் குறித்த பல வேறுபட்ட கருத்துக்களை கொண்ட இறையியல் கொள்கையாகவே கடந்த பல நூற்றாண்டுகளாக விவாதிக்கப்படுகிறது. பல கள்ள போதகர்கள் திரித்துவத்தின் உண்மைத்தன்மையை ஏற்க மறுக்கின்றனர். திரித்துவக்கொள்கைகள் பின்வருவனவற்றை வலியுறுத்துகின்றது.

1. பிதாவாகிய தேவன் ஒருவரே கர்த்தர்
2. தேவன் திரித்துவமான நித்தியவாசி
3. பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியாகிய தேவன்.
4. பிதா குமாரன் அல்ல, குமாரன் பிதா அல்ல, பிதா பரிசுத்த ஆவியானவர் அல்ல.

ஆன்ட்டி-நைர்ன் பாதர்ஸ் (கிறிஸ்துவின் ஆண்டு 325) என்ற வெளியீட்டில் பிதா, குமாரன், பரிசுத்தஆவியைக் குறித்து வலியுறுத்தி கூறப்பட்டுள்ளது.டெர்டுலியன் 215 ம் நூற்றாண்டில் திரித்துவம் என்கிற வார்த்தையை முதன்முதலில் பயன்படுத்தி, பிதா, குமாரன் பரிசுத்தஆவியின் முக்கியத்துவத்தையும் - மூவரும் ஒரே தன்மையல்ல என்றும் கூறப்பட்டது.

மூன்றாவது நூற்றாண்டுகள் முழுவதும் திரித்துவகொள்கை குறித்த முரண்பட்ட கருத்துக்களின் விவாதம் தொடர்ந்து கொண்டேயிருந்தது.

நான்காவது நூற்றாண்டிலே அரியஸ் தவறான போதனைகள் வலுபெற்றது. அவர் நித்தியமானவர் என வாதிட்டார். ஆர்யனிசம் (திரித்துவத்திற்கு எதிர்மறை) கொள்கையின்படி கிறிஸ்து அனைத்து படைப்புகளுக்கும் மேலானவர் என்னும் கொள்கை வேகமாக பரப்பப்பட்டது. கான்ஸ்டன்டைன் ஏகாதிபத்தியத்தின் மன்னனாக முடிசூட்டப்பட்டவுடன், ரோமின் மதமாக கிறிஸ்தவத்தை மாற்றும்படியாக 325 ஆண்டில் நைஜீரிய கவுன்சிலை கூட்டினார்.



**தேவனுடைய பரிபூரணமான நாமம் அங்கே யோர்தான் நதியிலே வெளிப்படுத் தப்பட்டது.அங்கே திரித்துவ தேவனை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகிறது.**


| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி | ஒருநோக்கு செய்தி | தேவனின் பண்புகள் | உங்களுக்குத் தெரியுமா? |
|---|---|---|---|---|
| | திரித்துவம் | திரித்துவ தேவத்துவம் 5-8<br>தனித்துவ தன்மை பக்கம் 8 | 9-10<br>கேள்விக்கென்ன பதில் | ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை நாம் இயேசுவை மாத்திரம் காண்போம் |
| பக்கம் - 3 | பக்கம் - 4 | | பக்கம் - 11 | பக்கம் - 12 |

# வேதாகமம்



## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ;  2 பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ;  யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ;  17 : 30 ;  2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ;  2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ;  யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1 : 15-16 ;
தீத்து 2 :  11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1 கொரி 12 : 12-13 ;  கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ;  கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1 கொரி 11 : 23-27 ;  யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18,  ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ;  லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ;  1 கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29 ;
2 கொரி 5 : 10 ;  மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 :  23,24 ;  எபே 5 : 19 ;
2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15

அதாவது திரித்துவத்தின் கொள்கை முரண்பாட்டைக் களையவும், பிதா, குமாரன், பரிசுத்தஆவியின் கிரியைகளை தெளிவுபடுத்தவும் அந்த கவுன்சில் ஏற்படுத்தப்பட்டது.



அதேனேசியஸ் ஆப் அலெக்சாண்டிரியா என்பவர் திரித்துவம் குறித்த கருத்துக்களை விவாதிக்கும் கமிட்டியின் வழிகாட்டியாக நியமிக்கப்பட்டார். கொள்கை எதிர்ப்புகள் நிறைந்த அச்சமயம் 250-318 அளவிலான பேராயர்கள் பெரும்பான்மையாக மாற்று மதக்கொள்கைகளுக்கு எதிராக வேதாகம சத்தியத்தின் உண்மையான காரியங்களை மீண்டும் உறுதிப்படுத்தினார்கள். அதன்படி கிறிஸ்து தெய்வீகமான நித்தியவாசியான ஒரே கர்த்தர் என்று உறுதிப்படுத்தப்பட்டது.நைஜீரியா கவுன்சில் நிசேயா விசுவாசப் பிரமாணமும் சேர்ந்து கர்த்தாதி கர்த்தர், ஜோதியில் ஜோதியானவர், மெய்தேவனில் மெய்தேவனானவர், உண்டாக்கப்படாமல் ஜெனிப்பிக்கப்பட்டவர், பிதாவோடே ஒரே தன்மையுடையவர் என்று விசுவாசப்பிரமாணம் ஒப்புக் கொள்ளப்பட்டது.ஒரே கர்த்தர், மூன்று தன்மையுடையவர் என்பதே கிறிஸ்தவ நம்பிக்கையின் அடித்தளம். திரித்துவத்தை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை யெனில், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.அவர் நமக்காய், நம்முடைய பாவங்களுக்காய் சிந்தின இரத்தத்தின் வல்லமையால் நம்முடைய பாவம் நிவிர்த்தியாக பழுதற்ற பலியாக ஒப்புக்கொடுத்த அவருடைய அன்புக்கு எது ஈடாகும்? தம்முடைய ஒரே பேறான குமாரனை இந்த பூமிக்கு அனுப்பி, நமக்காக மரித்து, உயிர்த்து நம்முடைய பாவங்களினின்று நம்மை விடுதலையாக்கி, பரிசுத்தஆவியானவராய் பிதாவாகிய தேவன் நம்மோடு வாசம் செய்கின்றார். அவருக்கே சகல துதியும் கனமும் மகிமையும் உண்டாகட்டும்.

## காஸ்பெல் ட்ரூத்

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம்.கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.*

*கர்த்தரின் வசனமே  விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும்.அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது.பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது.சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.*

## இணையதள சேவை

*எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** என்ற *இணையதள முகவரியை பார்க்கவும்.மேலும் உங்களது* **E.mail** *மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.*

## தொடர்புக்கு

*தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். பொள்ளாச்சி தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.*

**டபிள்யூ.எஸ்.வேதா,  காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி**
**பொள்ளாச்சி  வட்டம், தென் இந்தியா - 642 107**



# ஆசிரியரின் தலையங்கம்

ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம்.அசைகிறோம்.ஜீவனோடு இருக்கிறோம். அப்படியே உங்களில் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திரவேலையினாலும், யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது – அப்போ 17 : 28–29.

நாம் சுவாசித்து, ஜீவனோடு இருப்பது கர்த்தருடைய சுத்த கிருபையே. அவரே வாழ்வின் அடித்தளம். நித்தியஜீவ வாழ்வுக்கு சமாதானத்துக்கும், இரட்சிப்புக்கும் அவரே ஆதாரம்

தேவபிள்ளையாகிய நாம், ஞானவான்களாய், தேவனுடைய படைப்பின் அதிசயத்தை அலட்சியம் பண்ணாமல், திரித்துவத்தின் மேன்மையான நோக்கத்தை அறிந்து செயல்படுவோம். எல்லா ஆராதனைக்கும் அப்பாற்பட்டவரும், எல்லா படைப்புகளுக்கும் மேலானவர் நம் தேவாதி தேவன்.

இந்த இதழில் தேவத்துவத்தைக் குறித்தும், திரித்துவ தேவனின் பண்புகளுக்குச் சான்றாய் வேதத்தில் சொல்லப்பட்டுள்ள ஆதார சத்திய வசனங்களையும் காண இருக்கிறோம். அவ்வாறாக அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து, என்னுடைய வாழ்வில் நான் ஆசீர்வதிக்கப்பட்டவனாக இருக்கறேன். திரித்துவத்தை நாம் விளங்கிக் கொள்ளும்படியாக உருவாக்கப்பட்டுள்ள அநேக உதாரணங்களும், வரைபடங்களும் கூட சிலசமயம் அதை தெளவாக விவரிக்கத் தவறினாலும் கூட, தேவ சத்தியத்துக்கு நேராக மாத்திரம் நாம் கண்ணோக்கிப் பார்ப்போம். அப்போதுதான் அவர் மனுக்குலத்திற்கென்று கொண்ட திட்டத்தை நாம் புரிந்து அறிய முடியும். ஒரு எழுத்தாளர் இவ்வாறாக கூறுகிறார்; நீங்கள் திரித்துவத்தை விவரிக்க முயற்சித்தால், தோற்றுப் போகக் கூடும் ஆனால் திரித்துவத்தை மறுதலித்தால், உங்கள் ஆத்துமாவை இழந்துப்போவீர்கள்.

> F.G.சுமித் அவர்கள் எழுதிய வேதம் என்ன சொல்லுகிறது போதனையை கவனிப்போம். பலருக்கு திரித்துவம் என்ற போதனை முக்கியமற்றதாக தோன்றலாம், ஆனால் உண்மையில் அப்படி இல்லை அவருடைய அற்புதமான வல்லமையின் பிரமிப்பினால், நான் நினைத்துப் பார்க்கக் கூடாததும், கடந்து செல்ல முடியாததுமான ஒரு பெரிய பிரிவினை பிதாவுக்கும், இம்மனுகுலத்திற்கும் உருவானதால் அப்பிரிவினையின் சுவரை தகர்க்கும் பொருட்டே தேவன் மனிதனாய் இப்பூமிக்கு வந்தார்.
>
> அவர் உண்மையானால், தம்முடைய சொந்த சாயலாக மாம்சத்திலே மனிதன் உருவாக்கப்பட்டு, பாவம் செய்ததினால், சொந்த இரத்தத்தை சிந்தி, மீட்டு நல்லொழுக்கங்களையும், ஆவிக்குரிய ஐக்கியத்தையும் பரலோக தேவன் நமக்கு தந்தருளினார்.

தேவத்துவத்தைக் குறித்த சத்தியங்களை அறிந்து கொள்வது நமது அறிவுக்கும் அப்பாற்பட்டது. ஆகவே பரிசுத்த வேத எழுத்துகளை உண்மையாய் ஏற்று நடப்போம். திரித்துவக் கொள்கையை குறித்து முழுமையாக நம்மால் புரிந்து கொள்ளவில்லையாயினும், வேத சத்தியத்தை தெளிவாக ஏற்றுக்கொண்டு ஒளியின் பிள்ளைகளாய் நடப்போம்.


இந்த இதழை வாசிக்கிற ஒவ்வொருவருடைய மனதிலும் எளிமையான சத்தியமாக இந்த திரித்துவக்கொள்கை புரிந்துகெள்ளப்பட்டு நம் தேவாதி தேவனின் நாமம் மகிமைப்படட்டும். நம் அனுதின வாழ்விலே ஒரே தேவனின் மூன்று நாமங்களை சொல்லி ஆராதித்து, அகமகிழ்வது எவ்வளவு ஆசீர்வாதமான ஒரு காரியம்.


**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*


**ஆகையால் தேவனாகிய கர்த்தரே, நீர் பெரியவர் என்று விளங்குகிறது; நாங்கள் எங்கள் காதுகளாலே கேட்ட சகல காரியங்களின்படியும், தேவரீருக்கு நிகரானவர் இல்லை உம்மைத்தவிர வேறே தேவனும் இல்லை - 2 சாமுவேல் 7 : 22.**



# வேதாகம வழிகாட்டி

## பொருள் : திரித்துவம்

**வேத வாசிப்பு:** பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர் ; பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்– 1 யோவான் 5 : 7

**விளக்கம்:** ஒரே கர்த்தர்.அவர் நித்தியபிதா, என்றென்றும் மாறாமலிருப்பவர். அவரே திரித்துவ தேவன் பிதா, குமாரன், பரிசுத்தஆவி.திரித்துவ தேவன் தனித்தனியே கிரியைகளை நடப்பிப்பதில் வேறுபட்டிருப்பினும் செயலிலும் அவர்களுடைய நோக்கத்திலும் ஒன்றே.

**வரையறை:** திரித்துவம்.ஆங்கில வார்த்தையான Tri மற்றும் Unity ஆகிய வார்த்தை களிலிருந்து பெறப்பட்டது.மூன்று விதமான ஒன்றுபட்ட நிலை என்று பொருள்படும். ஒரே தேவனாய் என்றும் நிலைத்திருக்கும், மாறாத ஒருமைத்தன்மை வாய்ந்த திரித்துவ தேவனின் நாமத்தை உயர்த்துவோமாக.

### I. ஒருவரே கர்த்தர்

A. உபா 6 : 4 இஸ்ரவேலே கேள் : நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் (மாற் 12 : 29)

B. 1 கொரி 8 : 4-6 பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு

C. கலா 3 : 20 தேவனோ ஒருவர்

D. 1 தீமோ 2 : 5 தேவன் ஒருவரே

### II. பிதாவாகிய தேவன்

A. 2 பேது 1 : 17 இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி

B. எபேசி 5 : 20 எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து

C. யோவான் 6 : 27 அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரிக்கிறார்

D. ரோமர் 1 ; 7 உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்த மாகிறபடியினாலே..என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

E. 1 பேது 1 : 2 பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே

### III. குமாரனாகிய தேவன்

A. யோவான் 20 : 28 என் ஆண்டவரே! என் தேவனே

B. எபி 1 : 8 தேவனே உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்கு முள்ளது.உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.

C. யோவான் 1 : 1, 14 அந்த வார்த்தை (இயேசு) தேவன்

D. 1 தீமோ 3 : 16 தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்

E. பிலி 2 : 5-6 அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்

F. மத் 1 : 23 தேவன் நம்மோடிருக்கிறார்

G. ஏசா 9 : 6 வல்லமையுள்ள தேவன்

H. கொலோ 2 : 9 தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது.

I. கொலோ 2 : 15,16 அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்

### IV. பரிசுத்த ஆவியாகிய தேவன்

A. ஆதி 1 : 1-2 தேவஆவியானவர்

B. அப்போ 5 : 3-4 தேவனிடத்தில் பொய் சொன்னாய்

C. 1 கொரி 3 : 16 தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயி ருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?

D. ரோமர் 8 : 14 எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்

### V. திரித்துவம் வெளிப்படுத்தப்பட்டது

A. மத் 3 : 16-17 இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

B. மத் 28 : 19 பிதா, குமாரன், பரிசுத்தஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து

C. லூக் 1 : 30-35 உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்.கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்.

D. அப்போ 7 : 54-56 தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு

E. யோவான் 14 : 26 என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்தஆவியாகிய தேற்றரவாளனே (யோவான் 15 : 26)

F. 1 கொரி 12 : 4-6 ஆவியானவர் ஒருவரே, கர்த்தர் ஒருவரே தேவன் ஒருவரே

G. 2 கொரி 13 : 14 கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்தஆவியினுடைய ஐக்கியமும்

H. எபே 4 : 4-6 ஒரே கர்த்தரும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு.

### VI. திரித்துவத்தின் ஒருமைத்தன்மை

A. ஆதி 1 : 26-27 தேவன் : நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக (ஆதி 3 : 22)

B. 1 யோவான் 5 : 7 பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்

C. யோவான் 10 : 30; 17:11, 22 நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்.

D. யோவான் 10 : 38 பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படி

E. யோவான் 12 : 44 என்னிடத்தில் விசுவாசமாயி ருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான்.


F. யோவான் 14: 8-11 என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்

### முடிவு :

இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக : கற்பனைக ளிலெல்லாம் பிரதானமானது இஸ்ரவேலே கேள் நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் (மாற்கு 12 : 29)

# திரித்துவ தேவத்துவம்

சர்வ சிருஷ்டிக்கும் எஜமானரான தேவன் நம் தேவன் ஒருவரே –நித்தியபிதா, வல்லமையுள்ளவர், மாறாதவர்.ஞானமும், கனமும், மகிமையும் பொருந்திய மகாபிரபு என்று வேதம் நமக்குத் தெளிவாகப் போதிக்கிறது. அதேசமயம் பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்தஆவியாகிய தேவன் என்றும் வேதம் கூறுகிறது. ஒரே தேவன் மூன்று நாமங்களாயிருக்கின்றவர். இந்த தன்மையைதான் இறையியலில் நாம் திரித்துவம் என்கிறோம்.




**திரித்துவத்தின் இரகசியம்**

திரித்துவம் என்கிற வார்த்தை வேதாகமத்தில் குறிப்பிடப் படவில்லையெனினும் திரித்துவ கொள்கையான பிதா, குமாரன், பரிசுத்தஆவியைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது.ஒரே தேவன் அவர் என்றென்றும் மாறாமல் நிலைத்திருக்கும் நித்தியமான, சர்வ வல்லமையுள்ள தேவன் அநாதியாய் ஸ்தோத்தரிக்கப்படத்தக்கவர். திரித்துவ தேவனின் நாமத்தை ஏற்றுக் கொண்டு, அவரது படைப்பின் நோக்கத்தை புரிந்து உணர்வோம்.

திரித்துவம் என்பது மறை பொருளாகவும், நாம் கிரகித்துக் கொள்ளக் கூடியதாகவும் இல்லாவிடினும், தேவன் ஆதியும், அந்தமுமானவர். அவருடைய நாமத்தின் ஆழத்தை நம்முடைய மனக் கண்களால் அளவிட முடியாது.

சர்வ இரட்சிப்பைக் குறித்தும், ஆத்துமாவைக்குறித்தும், திரித்துவத்தைக் குறித்தும் வேதத்தின் சத்தியங்களைப் புரிந்துகொள்ள வேண்டியது நம் தலையாய கடமை.

**கர்த்தர் ஒருவரே கர்த்தர்**

இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக : கற்பனைகளிளெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால் :

இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் (மாற்கு 12 : 29).

ஆம் யாவே தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.பல்வேறு தேசங்களில் பலவித தெய்வ வழிபாடுகளை கொண்டிருந்தாலும் யூத ஜனங்களின் ஒரே தேவன் நம் கர்த்தர். உபாகமம் 6 : 4 வசனத்திலே கர்த்தர் திரும்பவும் உறுதிப்படுத்தி சொல்லியிருக்கிறார். இஸ்ரவேலே கேள் : நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.

ஒரே தேவன் கொள்கையே அடிப்படை சத்தியம்.ஆகவே திரித்துவக் கொள்கை இறையியலில் கர்த்தர் மூன்றுவிதமாக மாறவில்லை. பவுல் 1கொரி 8 :4 ல் ஒருவரே யன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக் கிறோம் என்று கூறுகிறார். மத்தியஸ்தர் ஒருவருக் குரியவரல்ல, தேவனோ ஒருவர்.

கலா 3 : 20.மேலும் தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே என்று 1 தீமோ 2 : 5 ல் சொல்லப்பட்டுள்ளது.

**திரித்துவ தேவன்**

ஒரே கர்த்தராகிய தேவன் திரித்துவ தேவனாயிருக்கிறார்.அவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாயிருக்கிறார். பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர்: பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே.இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் (1 யோவான் 5 : 7). தேவத்துவத்தின் மூன்று தன்மைகளும் ஒன்றான மெய்தேவனே என உணரச் செய்கிறது.திரித்துவத்தின் ஒவ்வொரு நாமமும் தேவன் என்று காணலாம். அவர்கள் மூவரும் வேறுவேறு அல்ல. ஒன்றே.மூன்று விதமான வார்த்தைகளான பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்தஆவியாகிய தேவன் என வேறுபடுத்தப்பட்டுள்ளது.

**பிதாவாகிய தேவன்**

பிதாவாகிய தேவனைக் குறித்து பல வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் யோவான் 6 : 27.



**பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய திரித்துவ தேவன் ஒரே தேவனாக நம்மில் வாசம் செய்பவர். பெயரால் வேறுபட்டிருப்பினும் கர்த்தர் ஒருவரே கர்த்தர்**

பவுல் ரோமாபுரியருக்கு எழுதிய சுவிசேஷத்தில் தமது நாமத்தினிமித்தம் விசுவாசத்துக்குக் கீழ்ப்படியப்பண்ணும் பொருட்டு, எங்களுக்குக் கிருபையையும் அப்போஸ்தல ஊழியத்தையும் அருளிச் செய்திருக்கிறார் (ரோமர் 1 : 7). பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது (2 பேது 1 : 17) . பிதாவாகிய தேவனுடைய முன்னறிவிப்பின் படியே (1 பேது 1 : 2). இவை யாவற்றினின்றும் நாம் விளங்கிக்கொள்வது யாதெனில் பிதாவான தேவன், கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் கூறியபடியே திரித்துவத்தின் ஒரு ரூபம்.

**குமாரனாகிய தேவன்**

இயேசுகிறிஸ்து புதிய ஏற்பாட்டிலும் பழையஏற்பாட்டிலும் பல இடங்களில் தேவனாக குறிப்பிடப்பட்டுள்ளார்.திரித்துவத்தை ஏற்றுக்கொள்ளாத பலரும் கிறிஸ்துவே பிதா என்று போதிக்கிறவர்களும் இருக்கையில் தேவனுடைய சத்திய வார்த்தை சொல்கிறது யாதெனில் தேவத்துவத்தின் ஒரு பகுதி அவர். ஏசாயா தீர்க்கதரிசி இவ்வாறு கூறுகிறார். நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்.அவர் நாமம் அதிசயமானவர்; ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன் (ஏசாயா 9 : 6).

கர்த்தருடைய தூதன் இயேசுகிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்கையில் அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம் (மத் 1 : 23) . யோவான் 1 : 1, 14 ல் ஆதியிலே வார்த்தை இருந்தது (இயேசு), அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது.அந்த வார்த்தை தேவனாயிருந்தது.அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம் பண்ணினார் (அவருடைய மகிமையைக் கண்டோம், அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது) தேவனே உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது. உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது (எபி 1 : 8).பிதாக்கள் அவர்களுடையவர்களே, மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே (ரோமர் 9 : 5). தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார். ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார் (1 தீமோ 3 : 16). உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்டதோமா பின்வருமாறு கூறினார் : என் ஆண்டவரே! என் தேவனே! என்றான் (யோவான் 20 : 28). அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் (பிலி 2 : 5-6). தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது (கொலோ 2: 9).இவையாவும் கிறிஸ்து இயேசு நித்தியமான தேவன் என்பதற்கு சாட்சி.

**பரிசுத்த ஆவியாகிய தேவன்**

திரித்துவத்தின் மூன்றாவது நாமம் பரிசுத்த ஆவியானவர். ஆதியிலே தேவஆவியானவர் படைப்பின் காரணராய் இருந்தார். ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்... தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார் ஆதி 1 : 1-2. அப்போ 5 : 3-4 ல் பேதுருவினிடத்தில் வந்த அனனியாவைப் பார்த்து, அவர் பரிசுத்தஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?...நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றான். இதிலிருந்து பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்வது தேவனிடத்தில் பொய் சொல்வதற்கு சமம் என தெரிகிறது. மற்றொரு சம்பவத்தில் 1 கொரி 3 : 16 நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிற போது : பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார் (அப்போ 13 : 2). ரோமர் 8 : 14 ல் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.

**மூவரும் ஒன்றே**

பிதா, குமாரன், பரிசுத்தஆவி ஆகிய மூவரும் ஒரே தேவன்.தேவனுடைய மூன்று நாமங்கள் லூக்கா 1 : 30-35 ல் தேவதூதன் மரியாளுக்கு காட்சி கொடுத்ததினால் நாம் திரித்துவ தேவனைக் காணலாம். பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்.ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும். கர்த்தராகிய தேவன் அவருடைய

பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது.

**இயேசுவின் ஞானஸ்நானம்**

மத்தேயு 3 : 16-17 ல் இயேசுகிறிஸ்து யோர்தான் நதியிலே யோவான்ஸ்நானகனிடம் ஞானஸ்நானம் பெற்ற சம்பவத்திலும், திரித்துவ தேவனின் வெளிப்பாட்டை காணலாம். ஏனெனில் பரிசுத்தஆவியானவர் மாம்சமாய் இருந்த இயேசுகிறிஸ்துவின் மீது வந்து அமர்ந்தார்.மேலும் இவர் என்னுடைய நேசகுமாரன்.இவரில் பிரியமாயிருக்கிறேன்

என்று உரைக்கிற பிதாவினுடைய சத்தத்தையும் அங்கே காண்கிறோம்.ஆகவே இந்த சம்பவத்தில் திரித்துவ தேவனின் வெளிப்பாட்டை அறியலாம்.

மேலும் இயேசு, நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்தஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து (மத் 28 : 19). இந்த வார்த்தை திரித்துவத்தைப் போதிக்கிறது.நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள் (யோவான் 14 : 26).

**ஸ்தேவான் கல்லெறியப்படும் போது திரித்துவத்தின் வெளிப்பாடு**

ஸ்தேவான் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும் தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு : அதோ வானங்கள் திறந்திருக் கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய (பிதா) வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான் (அப்போ 7 : 54 -56).

அதைக்கேட்டு மூர்க்கமடைந்த ஜனங்கள் ஸ்தேவானை கல்லெறிந்தார்கள்.இன்னும் வேதாகமத்திலே கூறப்பட்டுள்ளது யாதெனில் வரங்களில் வித்தியாசங்கள் உண்டு.எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே (1 கொரி 12 : 4-6). எபே 4:4-6 ல் ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு.

**திரித்துவத்தின் ஒருமைத்தன்மை**

திரித்துவத்தில் மூவராயிருந்தாலும், கர்த்தர் ஒருவரே.இந்த மூவரில் ஒருவரை நாம் விட்டுவிட்டாலும் கர்த்தரை ஏற்றுக்கொள்ளவில்லை என்றே அர்த்தம்.ஏனெனில் இது பரலோகத்தின் பரம இரகசியம். திரித்துவ தேவனை நாம் தனிமைப்படுத்தி பார்க்கலாகாது. ஏனெனில் திரித்துவ தேவனின் ஒருமைத்தன்மையை பல இடங்களில் வேதாகமத்திலே காணலாம்.

பின்பு தேவன் : நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக என்று ஆதி 1 : 26 ல் சொல்லப்பட்டுள்ளதிலிருந்து பன்மைத்தன்மையை காண முடிகிறது.

ஆதி 1 : 27 ல் தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். என கூறப்பட்டுள்ளதால் ஒருமைத்தன்மையை உணரலாம் (யோவான் 10 : 30). பிதாவின் தன்மைகளையும் அவருக்கான ஒற்றுமைகளையும் பல இடங்களில் இயேசு கூறியிருக்கிறார்.நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் (யோவான் 10 : 38).

இயேசுகிறிஸ்துவினுடைய சீஷர்கள் ஒன்றாயிருக்கும்படி, அவர் பிதாவை வேண்டிக் கொள்கிறார்...நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படிக்கு (யோவான் 17 : 11,12). பின்னும் யோவான் 12 : 44 ல் என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான்(பிதா). பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான்.

அதற்கு இயேசு பிலிப்புவே இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை ;

என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார்.நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லா விட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள் (யோவான் 14 : 8-11).



**திரித்துவ தேவன் மூன்று விதமாயினும் தேவன் ஒருவரே. பிதா, குமாரன் பரிசுத்தஆவியானவராகிய மூன்று நாமங்களில் ஏதாவது ஒன்றை நாம் ஏற்றுக்கொள்ளா விட்டாலும், கர்த்தரை ஏற்றுக்கொள்ளவில்லை என்றே அர்த்தம். இது பரலோகத்தின் பரம இரகசியம்.ஆகவே திரித்துவத்தை நாம் ஏற்றுக்கொள்ளக் கடவோம்.**


**கர்த்தருடைய வார்த்தையின் தெளிவான விளக்கம்**

திரித்துவம் என்று சொல்லப்பட்டுள்ள தேவனுடைய சத்திய வார்த்தையானது நாம் விளங்கிக் கொண்டு புரிந்துகொள்ள தேவ அநுக்கிரகம் கிடைக்க கர்த்தரை வேண்டுகிறேன்.திரித்துவத்தைக் குறித்த விவாதத்திற்குரிய கருத்துக்களை தவிர்ப்போம்.ஏனெனில் அப்படி நாம் விவாதித்து, திரித்துவக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாவிடில், தேவனுடைய குமாரனாம் இயேசுகிறிஸ்துவையும், அவருடைய வல்லமையையும், பரிசுத்தஆவியானவரையும் விசுவாசிக்க மறுதலிக்கிறவர்களாக எண்ணப்படுவோம். ஏனெனில் நாம் விசுவாசிக்கிறவர்களாய் இருந்தால், திரித்துவத்தின் தன்மைகளையும், கர்த்தர் ஒருவரே என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.அவரே நித்திய பிதா. அவருடைய பிள்ளைகளாகிய நமக்காக பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிற தேவன் அவர்.

ஆ தேவனுடைய ஐசுவரியம்,ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்? கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? தனக்குப் பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென் (ரோமர் 11 : 33, 36).ஓ கர்த்தாவே- பிதா, குமாரன், பரிசுத்தஆவியின் நாமத்தினாலே உம்மைத் துதிக்கிறோம்.

# திரித்துவ நாமங்களின் தனித்துவமான தன்மைகள்

*பிதாவாகிய தேவன் திட்டத்தை உருவாக்குகிறார்.*
*இயேசுகிறிஸ்து திட்டத்தை நிறைவேற்றுகிறார்*
*பரிசுத்த ஆவியானவரே கண்காணியாய் இருந்து வழிநடத்திச் செல்கிறார்.*



பிதா, குமாரன், பரிசுத்தஆவியாகிய திரித்துவ தேவனின் கிரியைகளை மனுக்குலம் ஏற்றுக் கொள்ளும்படி, மூவரின் தன்மைகளும் ஒரே நோக்கத்திற்கானது. திரித்துவத்தின் ஒவ்வொரு நாமமும் தனித்தனியான பொறுப்புகளையும் கிரியைகளையும் உடையவர்கள்.

ஒரு எழுத்தாளர் திரித்துவத்தின் தகுதிகளைப் பின்வருமாறு கூறியிருக்கிறார். பிதாவாகிய தேவன் திட்டத்தை உருவாக்குகிறார். இயேசுகிறிஸ்து தீர்மானத்தை நிறைவேற்றுகிறார். பரிசுத்த ஆவியானவரே கண்காணியாய் இருப்பவர். பிதாவாகிய தேவன் அன்பானவர். இரட்சிப்பு என்பதுதான் அவரது நோக்கமும், திட்டமும் ஆகும். அதைத் தம் ஜனங்களுக்கு ஈவாய் தரும்படியாகவே தம் ஒரே குமாரனாம் இயேசுகிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பினார்.

பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படியாக மாம்சமாக இம்மண்ணுலகில் அவதரித்து, தம் இரத்தத்தை சிந்தி, சிலுவையிலே மரித்து, உயிர்த்து நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.இவ்வாறாக பிதாவாகிய தேவனுக்கும், மனுக்குலத்திற்குமான பகையை தம் சிலுவையினாலே ஜெயித்தார்.

மேலும் பரிசுத்தஆவியானவரே பிதாவால் அனுப்பப்பட்ட தேற்றரவாளன்.அவர் ஆவியானவராய் நம்மோடு வாசம்செய்து நம்மை வழிநடத்திச் செல்வார். தேவனுக்கு கீழ்ப்படிந்து வாழும் தேவபிள்ளைகளின் இருதயத்தில் வாசம் செய்பவரும் அவரே. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்தஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்
- 2 கொரி 13 : 14.

# தேவனுடைய குணாதிசயங்கள்

வேதாகமத்தில் முதல் வார்த்தையே ஆதியிலே தேவன் என்றுதான் ஆரம்பிக்கிறது.அந்த வார்த்தை யிலிருந்தே தேவன் மனுக்குலத்திற்கும், அவர்தம் படைப்புகளுக்கும் தம்முடைய அன்பை விவரிக்க ஆயத்தமாகிறார்.இவருடைய திட்டம், நோக்கம், நியாயத்தீர்ப்பு இவையெல்லாவற்றிலும் தேவனுடைய கிரியைகளை ஆராய முடிகிறது.கர்த்தருடைய கிரியைகளையும் அவருடைய வல்லமையின் பராக்கிரமத்தையும் ஆராய்ந்து அறிந்து அவரில் என்றென்றும் மகிழக்கடவோம்.

# தேவன்...

## ஆவியானவர்

அடிப்படையில் கர்த்தராகிய தேவன் வெறும் வஸ்துக்களால் மாத்திரம் உருவாக்கப்பட்டவரல்ல

தேவன் ஆவியாயிருக்கிறார் – யோவான் 4 : 24.

## இருக்கிறவராக இருக்கிறவர்

கர்த்தராகிய தேவன் கைகளினால் ஜெனிப்பிக்கப்பட்ட ஒரு தேவன் அல்ல.அவர் வற்றாத ஜீவநதி போன்றவர்.

இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடன் சொல்லி – யாத் 3 : 14.

## ஜீவனுள்ளவரும் தன்னிறைவுடையவருமானவர்

அவர் தம்மிலே தாமே நிறைவுடையவர்.அவரே பரிபூரணமானவர்.

பிதாவானவர் தம்மிலேதாமே ஜீவனுடையவர் –யோவான் 5 : 26.

## நித்தியமானவர்

கர்த்தராகிய தேவன் தொடக்கமும், முடிவும் இல்லாதவர், மாறாதவரும், முடிவற்றவரும் அவரே

பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும், உலகத்தையும் உருவாக்கு முன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர் – சங் 90 : 2.

## அளவில்லாதவர்

அவர் அளவிடப்படமுடியாதவரும், எல்லையற்றவரும்,ஆராய்ந்து முடியாத வருமானவர்

நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார்.அவருடைய அறிவு அளவில்லாதது – சங் 147 : 5.

## திரித்துவம்

தேவன் மனுக்குலத்திற்கு தம்மை மூன்று விதமாக வெளிப்படுத்தியிருக்கிறார்.பிதா, குமாரன், பரிசுத்தஆவி

பரலோகத்திலே சாட்சியிடுகிறவைகள் மூவர். பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் – 1 யோவான் 5 : 7.

## கர்த்தர் ஒருவரே

கர்த்தர் ஒருவரே.அவர் ஜீவனுள்ள சத்திய தேவன் நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் மாற்கு 12 : 29.

## இராஜாதி ராஜா

கர்த்தரே பெரியவரும், பயங்கரமானவரும் அனைத்திற்கும் அதிபதியும் வல்லமையும் பொருந்தியவர்.

கர்த்தரே மகா தேவனும், எல்லா தேவர்களுக்கும் மகாராஜனுமாயிருக்கிறார் – சங் 95 : 3.

## எரிச்சலுள்ள தேவன்

தேவனுக்கேற்ற ஆராதனையை அவருக்கே மாத்திரம் செலுத்தக்கடவோம்.

கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவர் என்பது, அவர் எரிச்சலுள்ள தேவனே. ஆகையால், அந்நியதேவனை நீ பணிந்து கொள்ள வேண்டாம். யாத் 34 : 14.

## மாறாதவர்

கர்த்தர் என்றும் மாறாதவர்.ஒருபோதும் தன்மை மாறாதவர்.

நான் கர்த்தர்.நான் மாறாதவர் – மல்கியா 3 : 6.

## எங்கும் நிறைந்தவர்

கர்த்தர் எங்கும் வியாபித்திருப்பவர்.எவனாகிலும் தன்னை நாம் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளக்கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.நான் வானத்தையும், பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார் – எரேமி 23 : 24.

## சகல அதிகாரமும் நிறைந்தவர்

கர்த்தர் சகல அதிகாரமும் உடையவர்.வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது – மத் 28 : 18.

## அனைத்தையும் அறிந்தவர்

கர்த்தராகிய தேவன் எல்லாவற்றையும் ஆழ்ந்து அறிந்தவரும், நிகழ்காலத்தையும், கடந்தகாலத்தையும், வருங்காலத்தையும் அறிந்து உணர்ந்தவர். காலங்கள் அவருடைய கரத்திலிருக்கிறது.

அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் – எபி 4 : 13.

## ஞானமுள்ளவர்

ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் எது சரி, எது தவறு என்று பகுத்தறியும் குணமும், உண்மையான ஆழ்ந்த ஞானமும் உள்ள சர்வ வல்லமையுள்ள தேவன் அவர்

தேவனுடைய நாமத்துக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரமுண்டாவதாக; ஞானமும் வல்லமையும் அவருக்கே உரியது – தானி 2 : 20.

## அன்பு

இம்மனுக்குலத்தை நேசிப்பதே தேவனாகிய கர்த்தரின் தலையாய பண்பு. அன்பே உருவானவர் அவர். அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, அதனை கிரியையிலே வெளிப்படுத்துங்கள்.

தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்.அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான் தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார் – 1 யோவான் 4 : 16.

## பரிசுத்தம்

அவர் மாசற்றவரும், நீதிபரனுமாயிருக்கிறார். பாவ, சாபத்தினின்று விலக்கப்பட்ட பரிசுத்தமானவர் அவர். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறத –1 பேது 1 : 16.

## நீதியின் குணம் படைத்தவர்

நீதியும், நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்.கிருபையும், சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும் – சங் 89 : 14.

## நல்லவர்

தேவன் அன்பாகவே இருக்கிறார்

அவருடைய தயவு, பொறுமை, நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டை பண்ணுகிறாயோ – ரோமர் 2 : 4.

## உண்மையுள்ள தேவன்

அவர் பொய் சொல்லவும், மனம் மாறவும் மனிதனல்ல.
உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும் உண்மையுள்ள தேவன் என்றும் உபா 7 : 9.

## இரக்கமுள்ள தேவன்

மன்னிக்கிறவர், இரக்கமுள்ளவர், கருணையுடையவர்

கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர் –சங்கீ 103 : 8.

## இரக்கமுள்ளவர்

கர்த்தர் தயாளகுணமுள்ளவராய், நற்கிரியைகளின் ஈவை நமக்குத் தருகிறவர்.

எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி தீத்து 2 : 11.

## ஒப்பிடப்பட முடியாதவர்

யாருக்கும் இணையாகாத, ஒப்பிடப்படாத முடியாத நிகரற்ற தேவன் ஆவார்.

என்னை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எனக்கு யாரை நிகராக்குவீர்கள் என்று பரிசுத்தர் சொல்லுகிறார் – ஏசாயா 40 : 25.

# கேள்விக்கு என்ன பதில்?

திரித்துவக்கொள்கையில் கிறிஸ்து பரிபூரணமாய் தேவனாகவும் தேவன் பிதா, குமாரன், பரிசுத்தஆவியாகவும் இருக்கிறார். முட்டையின் வெவ்வேறு பகுதிகளைப் போலல்லாது திரித்துவம் என்பது ஒரே சாயல். அதுபோலவேதான் இன்னொரு உதாரணம் ஆப்பிள். ஆப்பிளானது மேல்தோல், உட்தோல் மற்றும் விதையை உடையது. திரித்துவத்திலும், ஒவ்வொரு இயல்பிலும் அவர் தேவனாக எண்ணப்படுகிறார்.

மற்றொரு பொதுவான உதாரணம் தண்ணீர். ஏனெனில் தண்ணீரானது திட, திரவ, வாயு நிலைகளில் காணப்படும். அதனுடைய வேதியியல் கொள்கைப்படி அது எந்த நிலையில் இருந்தாலும் வேதிவினைகள் சமமாக இருக்கும்.

**திருத்துவ ஒருமைப்பாடு என்றால் என்ன?**
இயேசுகிறிஸ்து ஒரே மாம்சத்தின் இருவேறு ரூபமானவர்– தெய்வீக மானவரும், மனுஷீகமானவரும். தேவன் ஆவியாயும், மாம்சமாயும் ஒரே மனுஷீக நிலையில் இருப்பதைக் குறித்துப் பார்க்கிறோம். மாம்சத்திலே கிறிஸ்து தேவனாக வெளிப்பட்டார். ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார் (யோவான் 1 : 1, 14). இயேசு இருவேறு தன்மைகளைக் கொண்டிருந்தார்– தேவனும், மாம்சமாகவும் வெளிப்பட்டார். அவர் பரிபூரணமாய் தேவசாயலாய், இந்த பூமியிலே வாழ்ந்தார்.

**ஏன் பிதா, குமாரன், பரிசுத்தஆவியானவரை வேறு வேறு நபர்களாக கருதுகின்றோம்?** தேவனாகிய கர்த்தர் திரித்துவத்தின் தன்மையில் பிதா, குமாரன், பரிசுத்தஆவியாக எண்ணப்படுகிறார். அவர்கள் மூவரும் ஒருவரல்ல. ஆனால் மூவரும் ஒரே தேவனே. இதைக் குறித்ததான வரைபடம் பக்கம் 5 ல் காட்டப்பட்டுள்ளது.

அவர்கள் மூவரும் ஒன்றல்ல என்பதிலிருந்து மூவருக்கும் தனித்தனியே மாம்சமான தேகம் உண்டென்பது போல இருந்தாலும் கூட தனித்தனியே அவர்களால் பேசவும், நம்மை நேசிக்கவும் முடியும்.

ஏனெனில் இவையே மனுஷீகத்தின் குணாதிசயங்களும் கூட. ஆகவேதான் மனுஷீகம் என்கிற வார்த்தையை உபயோகிக்கிறோம்.

**திரித்துவத்தை எப்படி விளக்கமாய் கூறலாம்?**
திரித்துவக்கொள்கையின் விளக்கவுரைகள் நிறைய உள்ளன. ஏறத்தாழ பல விளக்கங்களில் சரியான வகைப்படுத்துதல் இல்லை. அவ்வாறான தவறான விளக்கங்களைக் கொண்ட வரைபடங்களைச் சான்றாக நாம் எடுத்துக் கொள்ள கூடாது.

முட்டையின் உதாரணத்தைக் கொண்டு நாம் திரித்துவத்தை சரியாக விளங்கிக் கொள்ள முடியும்.ஒரு கோழி முட்டையானது முட்டைஓடு, வெள்ளைப்பகுதி,மஞ்சள்கரு என மூன்று பகுதிகளை உடையது.இந்த மூன்றும் சேர்ந்ததுதான் ஒரு முட்டை. அதுபோலதான் மூன்று தன்மைகளும் சேர்ந்ததுதான் பரிபூரணம் உண்டாகும். அதேசமயம் வெறும் மஞ்சள்கரு மாத்திரம் முட்டை ஆகாது.

மேலும் தண்ணீரின் ஒரு நேரத்தில் இந்த 3 நிலைகளில் ஏதாவது ஒரு நிலையில் மாத்திரமே இருக்கும்.ஆனால் திரித்துவக்கொள்கையில் எப்போதும் பரிபூரணமாய் அவர் வாசம்செய்பவர்.

இன்னொரு உதாரணத்தை எடுத்துக்கொண்டால், அது ஒரு மனிதனின் 3 விதமான உறவு நிலைகள் அதாவது தகப்பன், மகன் மற்றும் புருஷன்.ஒரே மனிதன்தான்.ஆனால் ஒரே சமயத்தில் அவரது மூன்று நிலைகளை நாம் காணலாம். இதன்மூலம் திரித்துவத்தை நாம் தெரிந்துகொண்டாலும் கூட, அதன் தனித்தனி நிலைகளின் கிரியைகளை முழுமையாக புரிந்துகொள்ள தவறுகிறது.

ஹென்றி மோரிஸ் உலகமானது வடிவமைப்பால் திரித்துவத்தை ஒத்தது என்கிறார்.எப்படியெனில் பொருள், இடம், நேரம்.இவைகளில் ஏதாகிலும் ஒன்றை எடுத்துவிட்டால், உலகமே இயங்காது. எப்படி உலகம் இயங்குவதற்கு இந்த மூன்று பகுதிகளின் தனித்தனியான இயக்கங்கள் முக்கியமோ, அதைப் போன்றது தான் திரித்துவமும்.

கணிதத்தின் வடிவியல் விளக்கங்களில் கூட நாம் திரித்துவத்தைப் புரிந்துகொள்ள உதாரணத்தை எடுத்துக்கொள்ளலாம். முக்கோணத்தின் மூன்று கோடுகள் ஒன்றையொன்று இணைத்து வடிவம் பெறுகிறது. ஆயினும் தனித்தனியே ஒவ்வொரு கோட்டையும் நாம் முக்கோணமாக எண்ணமுடியாததால், இதுவும் திரித்துவத்தை முழுமையாக விளக்க தவறுகிறது.

நாம் எடுத்துக்கொண்ட அனைத்து உதாரணங்களுமே திரித்துவத்தை முழுமைப்படுத்தப் போதுமானதாக இல்லை. ஏனெனில் பரிபூரணமான தேவத்துவத்தின் எல்லையில்லா, தன்னிகரற்ற நம் பரமதகப்பனின் தேவத்துவத்தை, சாதாரணமான ஒரு விளக்க வரைபடங்களால் முழுமையாக்க முடியாது. திரித்துவக் கோட்பாடானது கர்த்தரின் வெளிப்பாடே அல்லாமல் இயற்கையாகவோ அல்லது ஏதோ ஒரு காரணத்தினாலோ தானாக ஏற்பட்டதன்று.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

**உங்களுக்குத் தெரியுமா?**

பல கிறிஸ்தவ சபைப்பிரிவுகளில் திரித்துவம் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாகவே உள்ளது. மிகச் சொற்பம் என்றாலும், உலகின் இரண்டு பெரிய திருச்சபை பிரிவுகளைச் சார்ந்தவர்கள் இதில் அடங்குவர். இச்சபையினர் இயேசு கிறிஸ்து தொடக்கமும், அவரே பிதாவால் ஜெனிப்பிக்கப்பட்டவரும் ஆவார் என கருதுகின்றனர்.

அவர்கள் பரிசுத்த ஆவியை திரித்துவத்தின் ஒரு அங்கமாக கருதமாட்டார்கள. மாறாக கர்த்தருடைய வல்லமையே என கருதுவர். சில சபையின் போதனைகளில் கிறிஸ்து தேவனால் ஜெனிப்பிக்கப்பட்டவரும், தேவத்துவத்தின் மூன்று விதமான தேவனும் கர்த்தரே என்ற கருத்து உண்டு.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## நாம் இயேசுவை மாத்திரம் காண்போம்

அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில் இயேசுவைத் தவிர வேறொருவரையும் காணவில்லை – மத்தேயு 17 : 8 இயேசு, மறுரூபமலையிலே மோசேயாடும். எலியாவோடும் சம்பாஷித்துக் கொண்டிருப்பதுபோல காணப்பட்ட தரிசனத்திலே – மோசே எனகுறிக்கப்படுவது நியாயப்பிரமாணம். எலியா என குறிக்கப்படுவது தீர்க்கதரிசனத்தை உணர்த்துகிறது. மேலும் இயேசு கிருபையின் புதிய உடன்படிக்கையாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய தீர்க்கதரிசனம் அது.



அதிலே பேதுரு மிகுந்த உற்சாகத்தோடு, உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான். அவன் பேசுகையில், இதோ ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது (5) இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று சீஷர்கள் அதைக் கேட்டு முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள். அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில் இயேசுவைத்தவிர வேறொருவரையும் காணவில்லை.

பல சபைகளும், கிறிஸ்தவ இயக்கங்களும், ஊழியங்களும் நம்முடைய விசுவாசத்திற்கும், நோக்கத்திற்கும் போட்டியாக தவறான உபதேசங்களையும் நம்புகிறவர்களாக நாம் காண முடிகிறது. அதேசமயம் சரியான போதனைகளை கொண்ட பல சபைகளும், ஜனங்களும், கிறிஸ்துவையும், பிதாவாகிய தேவனையும் ஆராதிப்பதை, அர்ப்பணிப்போடு செய்து கொண்டிருக்கிறார்கள். எந்தவொரு நியாயப்பிரமாண சட்டமோ அல்லது தீர்க்கதரிசனமோ கிறிஸ்து ஒருவருக்கே ஆராதனை மட்டுமே என்று வலியுறுத்தவில்லை. நம்முடைய கஷ்டமான நேரங்களிலோ அல்லது மகிழ்ச்சியான தருணங்களாயினும், நாம் இயேசுவை மாத்திரமே நம் கண்முன் காண்கிற தரிசன வேளைகள் அநேகருடைய வாழ்விலே நடந்திருக்கும். அது நமக்கு புது உற்சாகத்தைத் தரும் தருணமாகவும் அமைந்திருக்கும், உலகத்தின் பல மாறுபாடான சத்தங்களுக்கிடையிலும், தனித்துவமாய் நாம் கேட்கக்கூடிய ஒரு அழகான சத்தம் அது நம் பிதாவினுடைய குமாரனாம் இயேசு கிறிஸ்துவின் சத்தம்.

நாம் எப்போதும் நம்முடைய சிந்தையையும், சூழ்நிலையையும் உலகத்தின் மேல் வைக்கும் போது ஏமாற்றப்பட்டுப் போகிறோம். சிலுவையை எடுத்துக் கொண்டு, கிறிஸ்துவின் மேல் சிந்தை கொண்டு, நம் கண்களை அவரை நோக்கி ஏறெடுப்போம்.

CONTACT :-

The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.VEDHA, CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107.
Phone : 04259 - 280488 Cell: 95975 62641
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316